# வலிப்பு நோய்
## அறிவோம் தெளிவோம்

மரு. அ. வேணி MD.,DM (Neuro)., மூளை நரம்பியல் நிபுணர்

**Tamil Psychiatry Journal, Vol. 1, Issue - 1, April - June 2025, Page 6 - 7**

உலகளவில் 500 இலட்சம் மக்கள் வலிப்பு நோயால் அவதிப்படுகிறார்கள். இதில் நம் இந்தியாவில் 120 இலட்சம் மக்களும், அதிலும் தமிழ்நாட்டில் 39 இலட்சம் மனிதர்களும் வலிப்புநோயால் அவதியுறுகிறார்கள். வலிப்பு நோய் என்றால் என்ன? எப்படி வருகிறது என்பது பற்றி முந்தையப் பகுதியில் பார்த்தோம்.

இன்று வலிப்பு நோய் வருவதற்கான காரணிகளைப் பற்றி பார்ப்போம்.

வலிப்பு நோயின் காரணிகள் ஒவ்வொரு மனிதர்களுக்கும் வயதிற்கேற்றவாறு மாறுபடுகின்றன. வலிப்பு நோய் என்பது மனிதர்களுக்கு எந்த வயதில் வேண்டுமானாலும் வரலாம். ஆனால் பிறந்த முதல் பன்னிரெண்டு மாதங்களுக்குள் வலிப்பு வருவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகமாக இருக்கிறதென்று மருத்துவர்கள் கூறுகிறார்கள். மருத்துவத் துறையின் புள்ளி விபரங்களைப் பார்க்கும் போது, ஒரு லட்சம் குழந்தைகளில் 40 முதல் 50 குழந்தைகள் வரை வலிப்பு நோயால் பாதிக்கப்படுகிறார்கள் எனத் தெரிய வருகிறது. இதில் பெரும்பாலான குழந்தைகளுக்கு வலிப்பு நோய் பிறந்த முதல் ஒரு வருடத்தில் வருகிறது என்பது தான் வேதனையான விஷயமாக இருக்கிறது.

குழந்தைகளுக்கு ஏற்படும் வலிப்பு நோய்களுக்கான காரணிகளைப் பற்றி விரிவாகப் பார்க்கலாமா?

குழந்தையின் மூளை வளர்ச்சியானது, முதல் ஒரு வருடத்தில் அதிவேகமாக இருக்கும். மைலினேசன் என்ற செயல் முதல் இரண்டு வருடத்தில் முழுமை அடைவதில்லை. இந்த நேரத்தில் மூளைக்குச் சிறிய பாதிப்பு ஏற்பட்டாலும், அது வலிப்பு நோயாக மாறிவிடும் என்பதைத் தான் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

குழந்தைக்கு வலிப்பு நோய் வருவதற்கான முக்கியக் காரணிகள்:

1. போதுமான அளவு ஆக்ஸிஜன் மூளைக்கு கிடைக்காமல் இருப்பது.
2. இரத்தத்தில் சர்க்கரையின் அளவு குறைவாக இருப்பது.
3. கால்சியம் மற்றும் மெக்னீசியம் சத்துக்களின் குறைபாடு.
4. குறைவான அல்லது அதிகப்படியான சோடியத்தின் அளவு.
5. பைரிடாக்ஸின் என்ற வைட்டமின் குறைபாடு.
6. மூளையில் உள்ள பிறவிக் கோளாறுகள்.
7. உணவு செரிமானத்தில் ஏற்படும் பிறவிக் கோளாறுகள்.
8. மூளைக் காய்ச்சல்.
9. காய்ச்சலால் வரும் வலிப்பு நோய் (Febrile Seizure)
10. மரபணுக் கோளாறுகள்.

பிறந்த குழந்தைக்கு வலிப்பு ஏற்படுவதற்கான முக்கிய காரணிகள்!

குழந்தைப் பிறந்தவுடன் அழும் முதல் அழுகையே குழந்தையின் முதல் மூச்சாகும். அந்த அழுகையின் மூலமாகவே குழந்தையின் மூளைக்கு பிராணசக்தி (ஆக்ஸிஜன்) செல்கிறது. குழந்தையின் அழுகை 10 விநாடிகள் தாமதித்தாலும் மூளைக்குச் செல்லும் ஆக்ஸிஜன் தடைபட்டு, மூளை பாதிக்கப்படுகிறது. இந்த பாதிப்பு வலிப்பு நோயாக வெளிப்படுத்தப்படுவதோடு

மட்டுமல்லாமல், குழந்தையின் அறிவுத் திறன், செயல் திறன், சிந்தனைத் திறன் ஆகிய மூன்றும் சேர்ந்து பாதிக்கப்படுகின்றன.

குழந்தைகளுக்கு வரும் வலிப்பு நோய் பெரும்பாலும் மரபணுக் கோளாறினாலும், மூளையில் ஏற்படும் பிறவிக் கோளாறினாலும், மூளையில் உள்ள நொதிகளின் குறைபாட்டினாலும் ஏற்படுவதால் என்ன தான் நாம் வலிப்பைக் குறைக்க மருந்துகள் கொடுத்தாலும், வலிப்பின் வீரியத் தன்மை அதிகமாகவே இருக்கும். இதில் 20 முதல் 30 சதவிகிதம் வரை மருந்துகள் கொடுத்தாலும், வலிப்பு வராமல் முழுவதுமாக தடுக்க முடிவதில்லை என்பது வருந்தத்தக்க உண்மையாகும்.

கருவுற்ற காலத்தில் தாய்க்கு ஏற்படும் உடல் நலக்குறைவுகளும், முக்கியமாக வைரஸ் கிருமிகள் தாயைத் தாக்கும் போது, குழந்தையின் பெருமூளை வெகுவாக பாதிக்கப்பட்டு, பிறந்தவுடன் வலிப்பாக வெளிப்படுத்தப்படுகிறது. இப்படிபட்ட குழந்தைகள் வலிப்பு நோயுடன் சிரமப்படுவதைக் காட்டிலும், பெற்றோர்களின் மனஉளைச்சல் மற்றும் அக்குழந்தையை வளர்க்க அக்குடும்பம் படும்பாடு என்றுமே வேதனைக்கு உரியது. இதற்கு பெற்றோர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி பிறகு விரிவாகப் பார்ப்போம்.

15 வயதிற்கு மேல் உள்ளவர்கள், நடுத்தர மற்றும் பெரியவர்களுக்கான வலிப்பு நோயின் முக்கிய 10 காரணிகள் பின்வருமாறு:

1. தலையில் அடிபடுதல்.
2. மரபணுக் கோளாறு.
3. மூளைக் காய்ச்சல்.
4. மூளையில் பூச்சிக்கட்டியினால் உருவாகும் தழும்பு கால்சிஃபிகேசன் (Calcification)
5. மூளையில் உண்டாகும் காசநோய் (TB) கட்டி.
6. கட்டுப்படுத்தப்படாத சர்க்கரை மற்றும் சோடியத்தின் அளவு.
7. மது அருந்துதல்.
8. பக்கவாத நோய்.
9. மூளையின் இரத்தக் குழாய்களில் உள்ள பிறவிக் கோளாறுகளினால் ஏற்படும் இரத்தக் கசிவு.
10. மூளையில் உருவாகும் புற்றுநோய் கட்டிகள்.

தலையில் அடிபட்டால் வலிப்பு வருவதற்கான காரணம் என்ன?

தலையில் அடிபட்டு மூளையில் இரத்தம் கசியும் போது, இரத்தமானது மூளையின் மேற்பரப்பில் ஓர் எரிச்சலை ஏற்படுத்தி வலிப்பை உண்டாக்குகிறது. இதில் பெரும்பாலான வலிப்பு, அடிபட்ட முதல் ஒரு வாரத்திற்குள் வந்து விடுகிறது. ஆனால் பலருக்கு உடனே வராமல் சிறிது நாட்கள் கழித்தும் வரலாம். இதற்கான காரணம் என்னவென்றால் தலையில் அடிபடும் போது, மூளை பாதிக்கப்பட்டு ஒரு சில பகுதிகள் வலிப்பை உருவாக்கும் வடுவாக மாறுகிறது. இச்செயல் நடைபெற 3 மாதத்திலிருந்து பல வருடங்கள் ஆகலாம். இதையே எபிலெப்டோஜெனிசிஸ் (Epileptogenesis) என்று அழைக்கிறோம். எனவே இதைத் தடுக்க இரு சக்கர வாகனங்களில் செல்பவர்கள் எப்பொழுதும் தலைக்கவசம் (Helmet) அணிய வேண்டும். நான்கு சக்கர வாகனங்களில் செல்பவர்கள் ஸீட்பெல்ட் (Seatbelt) அணிய வேண்டும்.